புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

ஆசிரியர்:
K.சபியுல்லா

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 327 | 01-06-2026 | திங்கள் | பக்கம்- 8 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி |
| Volum 01 | Issue: 327 | 01-06-2026 | Monday | Pages - 8 | Price- Rs. 5 | Trichy-Puducherry |



# கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே சூறாவளி காற்றால் வீடுகள், பால்வாடி கட்டிடம் சேதம்:

## தவெக மாவட்ட செயலாளர் முரளி விஜய் நேரில் ஆறுதல்!







மத்தூர்: ஜூன்.1–

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே உள்ள கிராமங்களில் திடீரென வீசிய சூறாவளி காற்றால் வீடுகள் மற்றும் பயிர்கள் சேதமடைந்து பொது மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மத்தூர் அடுத்த சின்ன ஆலேரஹள்ளி கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை பலத்த சூறாவளி காற்று வீசியது. இந்த காற்றின் வேகம் தாங்காமல் அப்பகுதியில் உள்ள பல வீடுகளின் கூரைகள் மற்றும் ஓடுகள் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்தன. மேலும், அங்குள்ள பால்வாடி பள்ளி கட்டிடத்தின் மீதும் காற்று பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல், அருகில் உள்ள கே.புதூர் பகுதியிலும் சூறாவளி காற்றின் தாக்கம் அதிகமாக இருந்தது. இப்பகுதியில் விவசாயிகள் பெரும் பரப்பளவில் பயிரிட்டிருந்த பப்பாளி செடிகள் காற்றில் வேரோடு சாய்ந்து முற்றிலும் நாசமாகின. இதனால் முதலீடு செய்த பணத்தை இழந்து தவிப்பதாக அப்பகுதி விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

பாதிப்பு குறித்து தகவல் அறிந்த தமிழக வெற்றி கழகத்தின் (தவெக) கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளி விஜய், பாதிக்கப்பட்ட சின்ன ஆலேரஹள்ளி மற்றும் கே.புதூர் ஆகிய கிராமங்களுக்கு நேரில் சென்றார்.

சேதமடைந்த வீடுகளையும், பால்வாடி கட்டிடத்தையும் பார்வையிட்ட அவர், பாதிக்கப்பட்ட பொது மக்களைச் சந்தித்து விபரங்களைக் கேட்டறிந்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். தொடர்ந்து, காற்றில் சாய்ந்த பப்பாளி தோட்டங்களையும் பார்வையிட்டு விவசாயிகளுக்கு தார்மீக ஆதரவை வழங்கினார்.

சூறாவளி காற்றால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள தங்களுக்கு, வருவாய்த்துறையினர் மூலம் உரிய கணக்கெடுப்பு நடத்தி, அரசு உடனடியாக நிவாரண உதவி வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாரச்சந்தையை பேரூராட்சி நிர்வாகமே நடத்த வேண்டும் துணைத்தலைவர் குற்றச்சாட்டு.

வடமதுரை ஜூன் 1

திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் வாரம் தோறும் வியாழக்கிழமை வாரச்சந்தை நடைபெறும் வார சந்தையானது அதிகாலை முதலில் தொடங்கப்பட்டு 8 மணி வரை நடைபெறும் சந்தைக்கு வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகளும் விவசாயிகளும் வந்து செல்வார்கள் ஆடு மற்றும் தரமான நாட்டு கோழிகளை வாங்கி செல்வது வழக்கம் இங்கு விளைவிக்கக்கூடிய கண்ணு வலிக்கிழங்கு மற்றும் சீனி கொய்யா தரமான தக்காளிகள் இங்கு நல்ல விலைக்கு வியாபாரிகள் வாங்கி செல்வது வழக்கமாகும் இந்நிலையில் இங்கு செயல்பட கூடிய வாரச்சந்தை தனியார் வசம் உள்ளதால் தனியார் துறையினர் சந்தையை சாலையிலேயே நடத்தி வருகின்றனர் இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவ மாணவியருக்கு சிரமத்தை ஏற்படுத்தி வருவதாகவும் பேருந்துகள் செல்வதற்கு சிரமம் இருப்பதால் மேம்பாலத்தில் சென்று விடுவதாகவும் கருத்து தெரிவிக்கின்றனர் பல ஆண்டுகளாக பிரச்சனை நடைபெறுவதாகவும் சந்தை நடைபெறும் இடம் இருள் சூழ்ந்த இடமாகவும் பெண்கள் மற்றும் வந்து செல்ல கூடிய வியாபாரிகளுக்கு பாதுகாப்பற்ற முறையில் இருப்பதாகவும் பல கோடி வர்த்தகம் நடக்கும் சந்தையில் அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்படுவதாகவும் பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் அடிப்படை தேவை வசதிகளை கூட தனியார் சந்தை நடத்தும் ஏலதாரர் தண்ணீர் வசதி மற்றும் ஆடுகளுக்கு குடிநீர் வசதி மின்சார வசதி கழிப்பிட வசதி இல்லாமல் வசூலில் மட்டுமே தீவிரம் சந்தையின் உட்புறம் எவ்வித பாதுகாப்பும் இன்றி வியாபாரிகள் நெடுஞ்சாலையிலேயே கடைகளை ஆக்கிரமித்து உள்ளதாகவும் இதனால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதாகவும் மாணவர்கள் மில் தொழிலாளிகள் கல்லூரி செல்லும் மாணவிகள் அவசர உறுதியான ஆம்புலன்ஸ் கூட செல்ல மிகவும் அவதியுற்று வருவதாகவும் சுகாதாரமின்றி தொற்றுநோய் பரவும் அபாய நிலை உள்ளதாகவும், பேரூராட்சி மேற்கண்ட தனியார் ஒப்பந்ததாரருக்கு வருடம் தோறும் தரக்கூடிய அனுமதி வழங்காமல் வாரச்சந்தை நடைபெறும் இடத்தை மாற்றி பேரூராட்சி நிர்வாகமே நடத்த வேண்டும் என்றும் உயிர்பழியும் விபத்து அபாயமும் ஏற்படும் முன்னதாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேரூராட்சி துணைத் தலைவர் செந்தில் பேரூராட்சி துறை உட்பட்ட அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அய்யலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இடமும் மனு ஒன்றை அளித்தார்.

# திருப்பூர்: இந்து முன்னேற்றக் கழக தலைவர் வழக்கறிஞர்.கோபிநாத் பேட்டி.



திருப்பூர்: ஜூன் 01

இந்து மக்கள் அரசியலில் புறக்கணிக்கப்படுகிறார்கள் நடிகராக இருந்த போது விஜய் என்றவர் இப்போது ஜோசப் விஜய் என்கிறார். அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை அதே போல் இந்து மத தொன்மையை பாதுகாக்க வேண்டும். மும்மொழி கொள்கை கண்டிப்பாக வேண்டும். வசதி படைத்தவர்கள் பணம் செலுத்தி பல மொழிகள் படிக்கிறார்கள் ஆனால் அரசு பள்ளி மாணவர்கள் இரண்டு மொழி தான் படிக்க வேண்டும் என்பது பராபட்சமானது. மோடியின் ஆளுமையால் இந்தியா முக்கிய இடத்தில் உள்ளது. பெரும் சித்தாந்தம் உருவாகி உள்ளது. இந்துக்கள் மட்டுமல்ல இந்திய மக்கள் மும்மொழி கற்க வேண்டும் என்கிறார். வடமாநிலம் சென்றால் இந்தி தெரியாமல் அவதி அடைவதாக உள்ளது. இந்தி வேண்டாம் என்பவர்கள் எப்படியோ நாசமா போங்க எனக்கு கவலை இல்லை. இஸ்லாமிய, கிருஸ்தவ வழிபாட்டு தலங்கள் அவர்களிடமே உள்ளது. ஆனால் இந்து கோவில்களுக்கு மட்டும் அறநிலையத்துறை உள்ளது.

கடந்த ஆட்சியில் செய்த தவறுகளை கண்டறிந்து உடனடியாக சரி செய்ய வேண்டும். அனைத்து இந்து மக்களும் நமக்கு நல்லது செய்பவய்களுக்கு வாக்களிக்க வேண்டும். இந்து முன்னேற்றக் கழகம் கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலும் துவக்குகிறோம்.

அர்ச்சகர்களுக்கு முறையான ஊதியம் கொடுத்தால் அவர்கள் பணம் பெற மாட்டார்கள். இந்த அரசு பச்சை குழந்தை சட்ட ஒழுங்கை பாது காக்க காவல் துறைக்கு முழு சுதந்திரம் கொடுக்க வேண்டும். தயார் வீட்டு பிள்ளை வைத்தே வளர்த்தால் அந்த வீடு வளராது.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...



தேனி மாவட்ட ஆட்சித்தலைவராக மரு.இரா. வைத்திநாதன் நேற்று (மே.31ம் தேதி) ஞாயிற்றுக்கிழமையன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.



கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக பத்மஜா பொறுப்பெற்று கொண்டார்.

# தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நடந்த அரிவாள் வெட்டு சம்பவத்தில் மேலும் ஒருவரை சுட்டுப் பிடித்தது போலீஸ்

தென்காசி: ஜூன்.1–

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நடந்த அரிவாள் வெட்டு சம்பவத்தில் மேலும் ஒருவரை சுட்டுப் பிடித்தது போலீஸ். தலைமறைவாக இருந்த நெட்டூரை சேர்ந்த ஐயப்பன் என்பவரை தனிப்படை காவலர்கள் சுட்டுப்பிடித்தனர். தாக்குதலை தடுக்கும் வகையில் தற்காப்புக்காக போலீசார் சுட்டதில் ஐயப்பன் என்பவர் படுகாயம் அடைந்துள்ளார். ஏற்கனவே இச்சம்பவம் தொடர்பாக 3 சிறுவர்கள் உள்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

# ராவுத்தர் பிலிம்ஸ் நிர்வாகி இல்லத் திருமண வாழ்த்து



ராவுத்தர் பிலிம்ஸ் திரைப்படத் தயாரிப்பு நிர்வாகி ராஜேந்திரன் மகள் யாஷாவினி மாப்பிள்ளை கவுதம் திருமண வரவேற்பு சென்னை கோவிலம்பாக்கம் ஸ்ரீ ராணி மஹாலில் நடைபெற்றது சினிமாத்துறையை சேர்ந்த ரெட் ஜெயன்ட் மூவீஸ் செண்பகமூர்த்தி, இயக்குநர்கள் எழில், மகிழ் திருமேனி இளவரசு.எஸ்.ஆர்.பிரபாகர் அப்புகுட்டி நடிகர்கள் விமல், யோகிபாபு, சூரி, பிக்பாஸ் ஆரவ், முனீஸ்காந்த், காளி வெங்கட், ஆடுகளம் நரேன் உட்பட பல்வேறு திரைப்பிரபலங்கள் குடும்பத்தினர் நண்பர்கள், பொதுமக்கள் வாழ்த்தினர்

# மாநகராட்சி தேர்தலில் அதிமுக பெரும்பான்மை இடங்களை கைப்பற்றும் முன்னாள் எம்பி சிவசாமி பேட்டி!!



திருப்பூர் ஜூன் 01

திருப்பூர் புறநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஆக இருந்த உடுமலை ராதா கிருஷ்ணன் நீக்கப்பட்டு முன்னாள் எம்பி சிவசாமி தற்பொழுது மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். என்னைத் தொடர்ந்து அவர் கட்சி நிர்வாகிகளை சந்தித்து கட்சியை பலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அதன்படி திருப்பூர் ஆண்டிபாளையம் பகுதியில் நிர்வாகிகளை சந்தித்து பேசினார் இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் ஏதோ மாயையில் வாக்களித்து விட்டு மக்கள் ஆதங்கத்தில் உள்ளனர். நாளை தேர்தல் நடந்தாலும் தவெக தோற்கும். அதிமுக வெற்றி பெறும். ஒரு சிலர் சுயநலத்திற்காக சென்றதால் வேட்பாளர் தேர்வு தவறு என சொல்ல முடியாது. அதிக உறுப்பினர் கொண்ட இயக்கம் அதிமுக ஆதவ் அர்ஜூனா அறியாமையில் பேசி வருகிறார். அவருக்கு என்ன அனுபவம் இருக்கிறது. சிறிது சிறிதாக வளர்ந்தவர்கள் நாங்கள். ஒவ்வொரு கட்சியாக தாவி சென்றவர் அவர்கள் அரசியல் தற்குறி. என விமர்சித்தார்.

மக்கள் ஏமாந்து வாக்களித்து விட்டார்கள். சோசியல் மீடியா தாக்கத்தில் கவர்ச்சியில் ஏமாந்து விட்டனர். அடுத்த வீதி, வீடுகளில் வாக்கு கேட்டோம். ஆனால் எங்கள் வீட்டு வாக்குகளை தக்கவைக்க தவறியது தான் எங்கள் தவறு. பொதுச் செயலாளர் தலைமையில் அதிமுக கட்டுக்கோப்பாக உள்ளது. தமிழ்நாட்டின் அனைத்து கட்சி தலைவர்களையும் விஜய் சந்தித்தார் ஆனால் எடப்பாடியாரை சந்திக்கவில்லை ஒரு தரப்பை மட்டும் சந்திக்கிறார். இது ஏமாற்று வேலை. அதிகாரிகளை கையாலும் திறன் இல்லாதது தான் சட்ட ஒழுங்கு சீர்கெட காரணம். திடீர் எம்எல்ஏ அமைச்சர் எனும் போது அதிகாரிகளிடம் எப்படி வேலை பெறுவது என துறையை ஆளும் திறன் இல்லை என்பதையே இது காட்டுகிறது. என தெரிவித்தார். நடைபெற உள்ள மாநகராட்சி தேர்தலில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் பெரும்பான்மை இடங்களை கைப்பற்றும் என அவர் தெரிவித்தார் இந்த நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கரைப்புதூர் நடராஜ் மற்றும் மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்...

# தமிழ்நாடு முதலமைச்சர் இன்று திருச்சிராப்பள்ளிக்கு வருகை புரிவதால் பேருந்துகள் மாற்று வழிப்பாதை

திருச்சி. ஜூன்.1–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.06.2026 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரத்திற்கு வருகை புரிவதால் காலை 10.00 மணி முதல் மத்திய பேருந்து நிலையம் மற்றும் திருவெறும்பூரிலிருந்து சத்திரம் பேருந்து நிலையத்திற்கு செல்லும் மாநகர பேருந்துகள் அனைத்தும் மரக்கடை வழியாக மெயின்கார்டுகேட் காந்தி சிலை அருகில் பயணிகளை இறக்கி விட்டு மேல அரண்சாலை (று.டீ) வழியாக செல்ல வேண்டும். திருவாணைக்கோவில் வழியாக வரும் பேருந்துகள் அனைத்தும் மாம்பழசாலையில் இறக்கி விட்டு திரும்பி செல்ல வேண்டும். கரூர் சாலையிலிருந்து வரும் பேருந்துகள் சத்திரம் பேருந்து நிலையத்திற்கு செல்லாமல் கே.டி சந்;திப்பு, சாஸ்த்திரி சாலை வழியாக மத்திய பேருந்து நிலையம் செல்ல வேண்டும். கடலூர், பெரம்பலூர், அரியலூரிலிருந்து வரும் பேருந்துகள் திருவாணைக்கோவில் வழியாக சத்திரம் பேருந்து நிலையத்திற்கு செல்லாமல் கொள்ளிடம் புறவழி சாலை வழியாக மத்திய பேருந்து நிலையம் செல்ல வேண்டும். சத்திரம் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் செல்ல அனுமதியில்லை. கனரக வாகனங்கள் மாற்று வழிப்பாதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.06.2026 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரத்திற்கு வருகை புரிவதால் காலை 07.00 மணி முதல் மதுரையி லிருந்து சென்னை செல்லும் கனரக வாகனங்கள் துவரங்குறிச்சியிலிருந்து மணப்பாறை, குளித்தலை, முசிறி பெரம்பலூர் வழியாகவும், திண்டுக்கலிலிருந்து சென்னை செல்லும் கனரக வாகனங்கள் மணப்பாறையிலிருந்து குளித்தலை, முசிறி, பெரம்பலூர் வழியாகவும், சென்னையிலிருந்து மதுரை, திண்டுக்கல் செல்லும் கனரக வாகனங்கள் பெரம்பலூரிலிருந்து முசிறி, குளித்தலை, மணப்பாறை வழியாக செல்ல வேண்டும். தஞ்சாவூர், புதுக்கோட்டை செல்லும் கனரக வாகனங்கள் பெரம்பலூரி லிருந்து, அரியலூர் வழியாக செல்ல வேண்டும். புதுக்கோட்டையிலிருந்து சென்னை செல்லும் கனரக வாகனங்கள் தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர் வழியாக செல்ல வேண்டும். தஞ்சாவூரிலிருந்து கரூர் செல்லும் கனரக வாகனங்கள் அரியலூர், பெரம்பலூர், துறையூர் வழியாக செல்ல வேண்டும். கரூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் கனரக வாகனங்கள் குளித்தலை, முசிறி, பெரம்பலூர், அரியலூர் வழியாக செல்ல வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரத்திக் தயாள், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று தொடக்கம்

டெல்லி: ஜூன்.1–

தமிழ்நாட்டில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று முதல் தொடங்குகிறது. சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.வி.சண்முகம் தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். சி.வி.சண்முகம் ராஜினாமா செய்ததை அடுத்து ஒரு மாநிலங்களவை இடம் காலியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஜூன் 18ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் நிலையில் நாளை முதல் ஜூன் 8ம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். ஜூன் 9ம் தேதி வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்படும், ஜூன் 11ம் தேதி வேட்புமனுவை திரும்ப பெற கடைசி நாளாகும்

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் காலியாக உள்ள மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் ஜூன் 18ம் தேதி நடைபெறவுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத் உள்ளிட்ட 10 மாநிலங்களில் மொத்தம் 24 மாநிலங்களவை இடங்கள் காலியாக உள்ள நிலையில், அவற்றை நிரப்புவதற்கான தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதனுடன், தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவில் காலியாக உள்ள இரண்டு மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கான இடைத்தேர்தலும் அதே நாளில் நடைபெற உள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரு முறை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஓய்வு பெறுவதால், அவர்களுக்கு மாற்றாக புதிய உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவது வழக்கமாகும். அந்த வகையில், காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் மூத்த தலைவர் எச்.டி. தேவகவுடா, மத்திய அமைச்சர்கள் ஜார்ஜ் குரியன் மற்றும் ரவ்னீத் சிங் உள்ளிட்ட 24 உறுப்பினர்களின் பதவிக்காலம் விரைவில் நிறைவடைய உள்ளது. இதன் காரணமாக இந்த தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் குஜராத் மாநிலங்களில் தலா நான்கு இடங்கள் காலியாக உள்ளன. ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் தலா மூன்று இடங்களுக்கும், ஜார்க்கண்டில் இரண்டு இடங்களுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. மேலும், மணிப்பூர், மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு மாநிலங்களவை இடத்திற்கும் வாக்குப் பதிவு நடத்தப்படும்.

இதற்கிடையே தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் காலியாக உள்ள இரண்டு உறுப்பினர் பதவிகளுக்கான இடைத்தேர்தலும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அதிமுக சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக இருந்த சி.வி. சண்முகம் தனது பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அந்த இடம் காலியாகியுள்ளது. அதேபோல், மகாராஷ்டிர மாநில துணை முதல்வராக பொறுப்பேற்ற சுனேத்ரா பவார் தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் அங்கு ஒரு இடம் காலியாகியுள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான தேர்தல் நடைமுறை விரைவில் தொடங்க உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் இன்று முதல் ஆரம்பமாகிறது. தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வேட்புமனு தாக்கல் செய்ய ஜூன் 8ம் தேதி கடைசி நாளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. வேட்புமனுக்களை பரிசீலனை செய்த பிறகு, அவற்றை திரும்பப் பெறுவதற்கான இறுதி நாள் ஜூன் 11ம் தேதி என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் தேர்தல் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

இதையடுத்து, மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான வாக்குப்பதிவு ஜூன் 18ம் தேதி நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு முடிந்ததும் அதே நாளில் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும் என்றும், விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.இந்த தேர்தல், தமிழ்நாட்டின் அரசியல் சூழல் மற்றும் பல மாநிலங்களில் அரசியல் கட்சிகளின் பலத்தை வெளிப்படுத்தும் முக்கியமான தேர்தலாகக் கருதப்படுகிறது.

## தவெகவுக்கு ஆதரவு ஏன்? காதர் மொகிதீன் விளக்கம்




கடலூர்: ஜூன்.1–

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி அல்லது திருமாவளவனை முதல்வராக்க திமுக முயற்சி செய்தது. ஆனால் மக்கள் விஜய்க்கு வாக்களித்த நிலையில் மாற்று ஏற்பாடுகள் என்பது ஜனநாயகத்துக்கு ஏற்புடையதாக இருக்காது என்பதால் தவெக அரசு அமைய ஆதரவு அளித்தோம் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியதலைவர் காதர்மொகிதீன் விளக்கம் அளித்துள்ளார்.

கடலூர் பரங்கிப் பேட்டையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியது: தேர்தல் பிரசாரத்தின் போதே பெண்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் மாற்றத்துக்கான மனநிலை இருப்பதாக திமுகவிடம் தெரிவித்தோம், ஆனால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

அதிமுக எம்எல்ஏக்கள் பதவியை ராஜினாமா செய்த பிறகே கட்சி மாறியுள்ளனர், இதை 'கட்சி உடைப்பு' என்று கூற முடியாது. திமுகவுடனான எதிர்கால உறவு குறித்து 20ம் தேதி நடைபெறும் பொதுக்குழுவில் முடிவு எடுக்கப்படும். தீய சக்தியை தூய சக்தியாக மாற்றும் முயற்சியை விஜய் மேற்கொண்டுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க முதல்வர் விஜய் இன்று திருச்சி வருகை



திருச்சி: ஜூன்.1–

திருச்சி கிழக்கு தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக, தவெக தலைவரும், முதல்வருமான விஜய் இன்று (ஜூன் 1) திருச்சி வருகிறார். தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தலைவர் விஜய் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். இதையடுத்து அவர், பெரம்பூர் தொகுதியை வைத்துக் கொண்டு, திருச்சி கிழக்குத் தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக முதல்வர் விஜய் இன்று (ஜூன் 1) திருச்சி வருகிறார்.

இதுகுறித்து தவெக டெல்டா மண்டல பொறுப்பாளரும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைவருமான கு.ப.கிருஷ்ணன் திருச்சியில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியது: தவெக தலைவர் விஜய், தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக திருச்சி வருகை தருகிறார்.

இதற்காக சென்னையிலிருந்து தனி விமானத்தில் திருச்சி விமான நிலையம் வரும் முதல்வர், அங்கிருந்து டிவிஎஸ் டோல்கேட், பழைய பால்பண்ணை, சஞ்சீவி நகர், சத்திரம் பேருந்து நிலையம் வழியாக தனியார் கல்லூரி வளாகத்துக்கு வருகிறார். பின்னர், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் மாலை 4 மணியளவில் பொது மக்கள் மத்தியில் நன்றி தெரிவித்துப் பேசுகிறார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து தமிழகத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் செல்ல இருக்கிறார். முதல்வர் விமான நிலையத்திலிருந்து விழா நடைபெறும் இடத்துக்கு வாகனத்தில் வரும் போது, அவரது வாகனத்தை யாரும் பின் தொடர வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது, பேரவைத் துணைத்தலைவர் எம்.ரவிசங்கர் உடன் இருந்தார். திருச்சி வரும் முதல்வர் விஜய்க்கு, திருச்சி விமான நிலையத்திலிருந்து கூட்டம் நடைபெறும் இடம்வரை சாலையின் இருபுறங்களிலும் வரவேற்பு அளிக்க தவெகவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## மின்துறை அமைச்சர் தொகுதியில் தவெக எம்எல்ஏ திடீர் ஆய்வு

திருப்பரங்குன்றம்: ஜூன்.1–

மதுரை வெள்ளக்கல் பகுதியில் மாநகராட்சியின் ஒருங்கிணைந்த குப்பைக்கிடங்கு உள்ளது. இங்கு மதுரை மாநகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. இந்த இடம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்குள் அமைந்துள்ளது.

இத்தொகுதியின் எம்எல்ஏவாக மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் உள்ளார். இந்த குப்பை கிடங்கினை, மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக இருக்கும் தவெக மாவட்ட செயலாளர் கல்லாணை, தனது ஆதரவாளர்களுடன் நேற்று திடீரென ஆய்வு செய்தார்.

அமைச்சர் தொகுதிக்குள் இருக்கும் குப்பைக்கிடங்கில் அதிகாரிகளுடன் வந்து ஆய்வு பணிகளை நடத்திய மற்றொரு தொகுதியின் எம்எல்ஏ, அதை வீடியோவாக பதிவு செய்து வெளியிட்டுள்ளார். இவரது இந்த நடவடிக்கை தவெகவினர், அதிகாரிகளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.






அமைச்சர்கள்,, ஆட்சியர்,, அரசு உயர் அதிகாரிகள், எம்எல்ஏக்கள் கலந்து கொண்ட ஆய்வு கூட்டம்...

# எந்த ஒரு அரசு சார்பு பொறுப்பிலும் இல்லாத ஒரு நபர் ஆய்வு மேடையில் அமர வைக்கப்பட்டது ஏன்..?

## இதற்கு ஈரோடு மாவட்ட நிர்வாகம் சொல்லும் விளக்கம் என்ன..?





ஈரோடு. ஜூன் 01

எந்த ஒரு அரசு பொறுப்பிலும் இல்லாத ஒரு நபர், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற, அமைச்சர்கள் அதிகாரிகள், எம்எல்ஏக்கள் கலந்து கொண்ட முக்கிய அரசு ஆய்வுக் கூட்டத்தில் மேடையில் அமர வைக்கப்பட்டிருந்தது அதிர்ச்செய்யும், கேள்விகளையும் எழுப்பி உள்ளது. இதற்கு ஈரோடு மாவட்ட நிர்வாகம் சொல்லப் போகும் விளக்கம் என்ன என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தமிழகத்தில் புதிய அரசு அமைந்துள்ள நிலையில், ஈரோடு மாவட்டத்திற்கு வருவாய் துறை அமைச்சர் மற்றும் கைத்தறி துறை அமைச்சர் என இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 10 மணி அளவில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பிலும், சரி துணி நூல் மற்றும் கதர் துறை சார்பிலும் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள மற்ற துறைகளில் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. சாமி தலைமை வகித்தார்.

இதில் கலந்துகொண்டு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. ஏ செங்கோட்டையன், கைத்தறி துணி நூல் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் எம். விஜய் பாலாஜி ஆகிய இரு அமைச்சர்களும் தங்களின் துறைகள் சார்ந்த பணிகள் குறித்தும் மற்றும் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்தும் அதிகாரிகளிடம் ஆய்வு மேற்கொண்டனர்.

சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்த ஆய்வு கூட்டத்தில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் மட்டும் கெட்ட பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ் ரூதி, எம்எல்ஏக்கள் ஈரோடு மேற்கு ஆனந்த மோகன், அந்தியூர் ஹரி பாஸ்கர், பவானிசாகர் தமிழ்ச்செல்வி, மாவட்ட வருவாய் அலுவலர்சு. சாந்தகுமார் உள்ளிட்ட மாவட்ட உயர் அதிகாரிகளும், துறைகள் சார்ந்த முக்கிய அதிகாரிகளும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வு கூட்டத்தின் போது அமைச்சர்கள், ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட மிக முக்கிய நபர்கள் மேடையில் அமர்ந்திருந்த நிலையில், துறை சார்ந்த அதிகாரிகள் அதன் எதிர்புறம் கீழ்பகுதியில் போடப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். இது எப்பொழுதும் இருக்கும் இயல்பான நடைமுறை.

ஆனால் இந்த இயல்பான நடைமுறைக்கு மாறாக, சட்ட விதி மீறலாக, முக்கிய நபர்கள் அமர்ந்திருந்த அதே மேடையில், அரசு சார்ந்த எந்த ஒரு ஆட்சி பொறுப்பு மற்றும் அரசு பொறுப்புகளும் இல்லாத ஒரு தனிநபர் அந்த ஆய்வு மேடையில் அமர வைக்கப்பட்டு இருந்தது, அதிகாரிகள் மற்றும் செய்தியாளர்களிடையே ஒரு பெரும் அதிர்ச்சியும், பெரும் கேள்வியையும் எழுப்பியது.

அந்த இடத்தில் கோபிசெட்டிபாளையம் கோட்ட ஆட்சித் தலைவர் அமர வேண்டிய இடம். அப்படி இருக்கும் பொழுது ஒரு முக்கியமான அரசு துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில், செய்தியாளர்களே போட்டோ, வீடியோ எடுக்க 5 நிமிடம் நேரம் தான் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், அந்த ஐந்து நிமிட நேரம் கடந்ததும் மாவட்ட ஆட்சியரே தன்னுடைய மைக்கில் செய்தியாளர்கள் வெளியேற வேண்டும் என்று பேசுகிறார். மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலரும், போட்டோ மற்றும் வீடியோ எடுத்துக் கொண்டிருந்த செய்தியாளர்களை வெளியே செல்லுமாறு கட்டாயப்படுத்தினார்.

ஆனால் எந்த ஒரு அரசு சார்ந்த பொறுப்பிலும் இல்லாமல் இன்றைக்கு ஆளும் கட்சியாக உள்ள ஒரு அரசியல் கட்சியில் ஒரு ரூபாய் உறுப்பினராக சேர்ந்த அந்த நபர் அந்த இடத்தில் அமரலாமா, ஈரோடு மாவட்ட நிர்வாகம் அதற்கு அனுமதி வழங்கலாமா, இது அப்பட்டமான அரசு துறை சார்ந்த முக்கிய ஆய்வுக் கூட்டத்தில் நடைபெற்ற ஒரு அப்பட்டமான அரசு விதிமீறல் ஆகாதா..,?. சம்பந்தப்பட்ட அந்த நபர் ஒரு முன்னாள் அமைச்சராக இருக்கலாம். ஆனால் தற்போது அவர் அமைச்சராக இருந்த கட்சியும் ஆட்சியில் இல்லை, சம்பந்தப்பட்ட அந்தக் கட்சியிலும் தற்போது அவர் இல்லை, ஆளுங்கட்சியின் ஒரு உறுப்பினராக இருப்பது, மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் மிக முக்கியமான துறை சார்ந்த ஆய்வு கூட்டத்தில், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் அமர்ந்திருக்கும் வரிசையில் இவர் எந்த அடிப்படையில் அமர்ந்திருந்தார், அல்லது அமர வைக்கப்பட்டிருந்தார்.

சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும், பத்திரிக்கை ஊடகவியலாளர்களும் கேள்வி எழுப்பும் நிலையில் ஈரோடு மாவட்ட நிர்வாகம் இதற்கு என்ன விளக்கம் தர போகிறது. பொறுத்து இருந்து பார்ப்போம்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடைபெறும் அந்த முக்கிய அரசு துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆய்வு மேடையில் அரசு விதிகளை மீறி அமர்ந்திருந்த அந்த நபர் முன்னாள் அமைச்சர் கே வி ராமலிங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்புத் துறை தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வழிபாடு



திருமலை: ஜூன்.1

பாதுகாப்புத் துறை தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு திருப்பதி வருகை: விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் உள்ளிட்டோர் ஏழுமலையான் கோவிலில் வழிபாடு செய்தனர்.

பாதுகாப்புத்துறை தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு திருமலைக்கு வந்தனர். அவர்கள் நேற்று காலை ஏழுமலையான் கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டு வழிப்பட்டனர்.பின்னர் கோயிலுக்குள் உள்ள ரங்கநாதர் மண்டபத்தில் தேவஸ்தான அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப் பட்ட நிலையில் வேத பண்டிதர்கள் வேத ஆசி வழங்கினர்.

தொடர்ந்து கோவிலுக்கு வெளியே பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் பேசுகையில் பாதுகாப்புத்துறை தொடர்பான பாராளுமன்ற நிலை குழுவினர் கடந்த 22 ம் தேதி காஷ்மீரில் துவங்கி பெங்களூர், கோவை, நீலகிரி, சென்னை ஆகிய இடங்களில் சுற்றுப் பயணம் செய்து பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தி இருக்கிறோம்.

நிறைவாக நேற்று கர்நாடக மாநில முன்னாள் முதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகதீஷ் ஷிட்டர் தலைமையில் திருப்பதிக்கு வந்து ஏழுமலையானை வழிப்பட்டோம்.

எங்களை சிறப்பான முறையில் வரவேற்ற தேவஸ்தான நிர்வாகம் சாமிகும்பிடஏற்பாடுகளை செய்து கொடுத்தது. இந்த பயணம் மகிழ்ச்சியாக இருந்தது என்று அவர் தெரிவித்தார்.

# திருப்பத்தூர் ஜோலார்பேட்டை அருகே இந்தியன் வங்கியில் போலி நகைக்கடன் ரசீது: 59.5 கிராம் தங்கத்துக்கு 40 கிராம் என மோசடி வாடிக்கையாளர் தர்ணா








வாணியம்பாடி, ஜூன்.1–

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே உள்ள பொன்னேரி இந்தியன் வங்கியில் 59.5 கிராம் தங்க நகைக்கு பதிலாக 40 கிராம் என போலி நகைக்கடன் ரசீது வழங்கியதாகக் கூறி வாடிக்கையாளர்கள் வங்கி முன்பு தர்ணாவில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜோலார்பேட்டை அடுத்த சின்னமோட்டூரைச் சேர்ந்த ராமகிருஷ்ணனின் மகன் சரத்குமார், கடந்த 16.10.2025 அன்று 59.5 கிராம் தங்க நகைக்கு ரூ.2,10,000 நகைக்கடன் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஓராண்டு முடிந்த நிலையில், கடந்த 27.05.2026 அன்று சரத்குமார் ரூ.2,25,000 செலுத்தி, தனது பெயரிலிருந்த கடனை தங்கை சங்கீதாவின் பெயருக்கு மாற்றியுள்ளார். அப்போது 59.5 கிராம் தங்கத்துக்குப் பதிலாக 40 கிராம் மட்டுமே உள்ளதாக வங்கி மேலாளர் போலி ரசீது வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனால் அதிர்சியடைந்த சரத்குமாரும், சங்கீதாவும் வங்கி மேலாளரிடம் நகையைக் காட்டுமாறும், கடந்த ஆண்டு வைத்த நகைக்கடன் ரசீது மற்றும் அன்றைய சிசிடிவி காட்சியைக் காட்டு மாறும் கேட்டுள்ளனர். ஆனால் மேலாளர் முறையற்று பதிலளித்து, “போலீஸிடம் வேண்டுமானால் சொல்லுங்கள்” என மிரட்டியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து இருவரும் பொன்னேரி இந்தியன் வங்கி முன்பு தர்ணாவில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஜோலார்பேட்டை போலீசார் நடத்திய விசாரணையில்,மேலாளர் வழங்கிய நகைக்கடன் ரசீது போலியானது என்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். 59.5 கிராம் தங்கத்துக்கு 40 கிராம் என போலி ரசீது வழங்கிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஏகணிவயல் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் தேர் பவனி கோலாகலம் : திரளான பக்தர்கள் பங்கேற்பு





அறந்தாங்கி ஜுன் 1

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே உள்ள ஏகணிவயல் கிராமத்தில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் தின் ஆண்டு பெருவிழாவை முன்னிட்டு தேர் பவனி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

விழாவையொட்டி காலை முதலே ஆலயத்தில் சிறப்பு திருப்பலியும், வழிபாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

தொடர்ந்து அலங்கரிக்கப் பட்ட தேரில் புனித ஆரோக்கிய அன்னையின் திருவுருவம் எழுந்தருளச் செய்யப்பட்டு, கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக தேர் பவனி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் செண்டை மேளங்கள் முழங்க ஏகணிவயல் மற்றும் சுற்றுவட்டார பகுதி களைச் சேர்ந்த ஏராளமான கிறிஸ்தவ மக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பக்தியுடன் வழிபட்டனர்.

தேர் சென்ற பாதைகளில் பக்தர்கள் மலர் தூவி வரவேற்பளித்ததுடன், சிறப்பு பிரார்த்தனைகளும் நடைபெற்றன. பெருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகம் வண்ண விளக் குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து மேற்கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி திருக்கோகர்ணம், தொழிலாளர் உதவி ஆணையர் நல அலுவலகம் (சமூக பாதுகாப்புத்திட்டம்) மற்றும் (அமலாக்கம்) ஆகிய அலுவலகங்களின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் ஜா.முகமது பர்வேஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ரெட் கிராஸ் சங்கம் சார்பில் உலக புகையிலை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி



வந்தவாசி, ஜூன் 01:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ரெட் கிராஸ் சங்க கிளை சார்பில் உலக புகையிலை எதிர்ப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி பாலாம்பாள் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் புகையிலை பயன்பாடுகளால் ஒவ்வொரு ஆண்டும் 60 லட்சம் பேர் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இது வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் 80 லட்சமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இன்றைய சூழலில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் இதைப் பயன்படுத்தும் அவல நிலை உள்ளது. இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ரெட் கிராஸ் சங்க செயலாளர் பா.சீனிவாசன், சங்க நிர்வாகிகள் கு.சதானந்தன், க.வாசு, மலர் சாதிக் ஆகியோர் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர். மேலும் புகையிலை ஒழிப்பு தின விழிப்புணர்வு போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. முன்னதாக, உலக புகையிலை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் ஆசிரியர் மகாவீர் நன்றி கூறினார்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421, 9750589992

# சேலம் மாவட்ட ஆட்சியரின் முக்கிய அறிவிப்பு 2 சக்கர வாகனம் வாங்க ரூ.50 ஆயிரம் மானியம்.



சேலம். ஜூன்.1–

சேலம் மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் புதிய இருசக்கர வாகனம் வாங்குவதற்குத் தமிழ்நாடு அரசு வழங்கும் ரூ.50,000 மானியத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்துப் பயன்பெறலாம் என சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தகுதியுடைய நபர்கள் உரிய ஆவணங்களுடன் வரும் ஜூன் 30 ஆம்தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலமாக்களுக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசின் இத்திட்டத்தின் கீழ், பள்ளி வாசல்களில் பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்கள் புதிய இருசக்கர வாகனம் வாங்குவதற்கு மானியத் தொகையாக ரூ.50,000/ வழங்கப்படவுள்ளது. உலமாக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் போக்குவரத்துத் தேவையை எளிதாக்கவும் இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்புபவர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

விண்ணப்பதாரர்கள் அனைவரும் 'உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில்' உறுப்பினராகப் பதிவு பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் உலமாக்கள் 18 வயது முதல் 60 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை மற்றும் முக்கிய விதிகள்

இருசக்கர வாகனத்திற்கான இந்த மானியத்தைப் பெற விரும்பும் தகுதியுடைய பயனாளிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவத்துடன் கேட்கப்பட்டுள்ள உரிய ஆவணங்களை இணைத்து முதலில் சமர்ப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, அதிகாரிகளின் முறையான ஒப்புதல் (Approval) பெற்ற பின்னரே பயனாளிகள் புதிய இருசக்கர வாகனத்தை வாங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய அனைத்து ஆவணங்களுடன் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், அறை எண்.110 ல் அமைந்துள்ள 'மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில்' நேரில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த மானியத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் 30.06.2026 ஆகும். எனவே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுடைய உலமாக்கள் அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உரிய காலக் கெடுவிற்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுவான சந்தேகங்களும் விளக்கமும்....

1. கேள்வி: இத்திட்டத்தின் கீழ் புதிய இருசக்கர வாகனம் வாங்க எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது?

பதில்: இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய உலமாக்கள் புதிய இருசக்கர வாகனம் வாங்குவதற்குத் தமிழ்நாடு அரசால் ரூ.50,000/ மானியமாக வழங்கப்படுகிறது.

2. கேள்வி: இத்திட்டத்தின் கீழ் பயன்பெற உலமாக்களுக்கு என்ன வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

பதில்: விண்ணப்பிக்கும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் குறைந்தபட்சம் 18 வயது முதல் அதிகபட்சம் 60 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

3. கேள்வி: பள்ளிவாசல்களில் பணியாற்றும் யார் யாரெல்லாம் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்?

பதில்: நலவாரியத்தில் பதிவு பெற்ற பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்கள் விண்ணப்பிக்கலாம்.

4. கேள்வி: பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் எது?

பதில்: உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க 30.06.2026 இறுதி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5. கேள்வி: விண்ணப்பப் படிவங்களை எந்த அலுவலகத்தில் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்?

பதில்: சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், அறை எண் 110ல் உள்ள 'மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில்' பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

# அரசுத்துறை காலிப் பணியிடங்கள் உடனே நிரப்பி இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்



சென்னை: ஜுன்.1

ஒரே நாளில் 5,000 பேர் ஓய்வு: 5 லட்சத்தைக் கடந்த அரசுத்துறை காலிப் பணியிடங்கள் உடனே நிரப்பி இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார். மே மாதத்தின் கடைசி பணி நாளான நேற்று மட்டும் தமிழக அரசுத் துறைகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணி ஓய்வு பெற்றுள்ளனர். அதனால் ஏற்பட்ட காலியிடங்களையும் சேர்த்து அரசுத் துறைகளில் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை 5 லட்சத்தைக் கடந்து விட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரசுத் துறைகளில் 41.7% பணியிடங்கள் காலியாக இருப்பது அரசு நிர்வாகத்தை நிலைகுலையச் செய்து விடும்.

தமிழ்நாட்டில் அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் 12 லட்சத்திற்கும் கூடுதலான பணியிடங்கள் உள்ளன. அவற்றில் கடந்த காலங்களில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்ப ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்காததன் விளைவாகத் தான் காலியிடங்களின் எண்ணிக்கை இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 50 ஆயிரம் அரசுப் பணியிடங்கள் காலியாகின்றன. ஆனால், அவற்றில் 10 ஆயிரம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்படுகின்றன. இதனால் கடந்த 20 ஆண்டுகளாகவே காலியிடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. அரசுப் பணிகளுக்கு போதிய எண்ணிக்கையில் ஆட்கள் தேர்வு செய்யப்படாததால், படித்த இளைஞர்களுக்கு அரசு வேலை என்பது எட்டாக் கனியாகி விட்டது.

தமிழ்நாட்டில் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள முதலமைச்சர் விஜய் அவர்கள் தலைமையிலான த.வெ.க. அரசுத்துறைகளில் உள்ள அனைத்து காலியிடங்களும் நிரப்பப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறது. பல ஆண்டுகளாக அரசு வேலை கிடைக்காததால் லட்சக்கணக்கான இளைஞர்கள் விரக்தியில் வாடிக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் வாட்டத்தைப் போக்கும் வகையில் அரசுத் துறை காலியிடங்களை நிரப்பி இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் மாவட்டம் முழுவதும் நடத்திய சோதனைகளின் போது "கால்சியம் கார்பைட்" மற்றும் அனுமதிக்கப்படாத பிற பழுக்க வைக்கும் காரணிகளின் சட்டவிரோத பயன்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்கில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு.



திருச்சி. ஜூன்.1–

உணவு பாதுகாப்பு ஆணையரின் சிறப்புச் செயல்பாடு ஆணை ஆகியவற்றின் தொடர்ச்சியாக, பழங்களை செயற்கையாகப் பழுக்க வைப்பதற்கு "கால்சியம் கார்பைட்" பயன்படுத்துவது, உணவு பாதுகாப்பு தரநிலைகள் (விற்பனை மீதான தடை மற்றும் கட்டுப்பாடுகள்) விதிமுறைகள், 2011ன் விதிமுறை 2.3.5ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவா; அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நியமன அலுவலர் தலைமையில் மாவட்டம் முழுவதும் நடத்திய சோதனைகளின் போது "கால்சியம் கார்பைட்" மற்றும் அனுமதிக்கப்படாத பிற பழுக்க வைக்கும் காரணிகளின் சட்டவிரோத பயன்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்கில், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர். பழசந்தைகள்/ மண்டிகள், சேமிப்புக் கிடங்குகள், மொத்த விற்பனையாளர்களின் வளாகங்கள், விநியோக நிறுவனங்கள் மற்றும் பருவகால பழங்கள் சேமிக்கப்படும் குளிர்பதன இடங்கள் "கால்சியம் கார்பைட்" பயன்படுத்துவதாக சந்தேகிக்கப்படும் இடங்களிலும் தீவிர கண்காணிப்பும் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. இந்த அமலாக்க நடவடிக்கையின் போது வியாபாரிகள் மற்றும் இதில் தொடர்புடைய வணிக நிறுவனங்களிலும் சோதனையின்போது 30கிலோ அளவிலான கெட்டுப்போன மாம்பழங்களும் இதர பழங்களும் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்து அழிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட உணவு வணிக நிறுவனங்களின் மீது அபராதம் விதிக்கப்பட்டது. திருச்சி மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்ட மொத்தம் 155 கடைகளில், 5 கடைகள் நிர்ணயிக்கப்பட்ட உணவு பாதுகாப்பு தரங்கள் மற்றும் விதிமுறைகளை கடைபிடிக்காத நிலையில் செயல்பட்டது கண்டறியப்பட்டது. மேலும், எத்திலீன் சார்ந்த பழுக்க வைக்கும் உணவு பொருட்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வரம்புகள் குறித்தும், விதிமுறைகளை கடைபிடிப்பதை உறுதி செய்வதற்காக பின்பற்ற வேண்டியவை மற்றும் தவிர்க்க வேண்டியவை குறித்தும் வியபாரிகளுக்கு விளக்கப்பட்டது. ரசாயானப் பொருள்களை தவறாக பயன்படுத்துவது பொது சுகாதாரத்திற்கு ஆபத்து விளைவிக்கும் என்றும், மேலும் விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டத்தின் படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்றும், இத்தகைய அமலாக்க சோதனைகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து மாவட்டத்தில் நடைபெறும் என்றும் மாவட்ட நியமன அலுவலர் மரு.ஆ.ஜெகதீஸ் சந்திர போஸ் தெரிவித்துள்ளார்.

# மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் குறைவாக இயக்கப்படுவதாக மக்கள் சாலை மறியல்

மதுரை: ஜூன்.1–

மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் குறைவாக இயக்கப்படுவதாக மக்கள் சாலை மறியலில் ஈடுப்பட்டனர். நீண்ட நேரம் காத்திருந்த பொதுமக்கள் திடீரென மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் முன்பாக சாலை மறியல். மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் சில நாட்களாகவே குறைந்த அளவில் பேருந்துகள் இயக்கப்படுவதாக புகார். பேருந்துகள் இல்லாமல் நீண்ட நேரம் பேருந்து நிலையத்திலேயே காத்திருந்ததாக பொதுமக்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர். மறியலில் ஈடுபட்டவர்களுடன் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி மாற்று பேருந்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர்.

மதுரையில் இருந்து சென்னை, கோவை, திருப்பூர் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்குச் செல்வதற்காக நேற்றிரவு முதலே ஆயிரக்கணக்கான பயணிகள் தங்களது குடும்பத்தினருடன் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் குவிந்தனர். சிறப்புப் பேருந்துகள் போதுமான அளவில் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பல மணி நேரம் காத்திருந்தும் குறிப்பிட்ட ஊர்களுக்குச் செல்ல ஒரு பேருந்து கூட வரவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனால் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் விடிய விடிய பேருந்து நிலையத்திலேயே தங்கும் அவலநிலை ஏற்பட்டது. போக்குவரத்து அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் முறையான பதில் கிடைக்காததால் ஆத்திரமடைந்த பொதுமக்கள், இன்று காலை பேருந்து நிலையத்தின் நுழைவாயில் மற்றும் வெளிச்சாலையில் திரண்டு திடீரென அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் போக்குவரத்து முற்றிலும் ஸ்தம்பித்தது. இதுகுறித்து பயணி ஒருவர் பேசுகையில், நேற்று இரவு 9 மணிக்கு வந்தோம். விடியற்காலை 6மணி ஆகியும் கோவைக்கு ஒரு பேருந்து கூட வரவில்லை. தனியார் ஆம்னி பேருந்துகளில் வழக்கத்தை விட மூன்று மடங்கு கட்டணம் கேட்கிறார்கள். அரசுப் பேருந்துகளை நம்பி வந்த எங்களை விடிய விடிய தவிக்கவிட்டு விட்டார்கள் என்று வேதனை தெரிவித்தார்.

மறியல் போராட்டம் காரணமாக மாட்டுத்தாவணி சந்திப்பில் பெரும் பதற்றம் நிலவியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் பொதுமக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பயணிகளின் கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்த போலீசார், உடனடியாகப் போக்குவரத்துத் துறை அதிகாரிகளைத் தொடர்புகொண்டு அவசர அவசரமாக மாற்றுப் பேருந்துகளுக்கு ஏற்பாடு செய்தனர்.

# நாகர்கோவில் அருகே பரிதாபம் நின்றிருந்த டெம்போ மீது கார் மோதி தாய், மகன் உள்பட 3 பேர் பலி

நாகர்கோவில் :ஜூன்.1–

நாகர்கோவில் அருகே நான்கு வழிச்சாலையில் நேற்று மதியம் நின்றிருந்த டெம்போ மீது கார் மோதிதாய், மகன் உள்பட 3 பேர் பலியாகி னர். திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே சிறுமளஞ்சி கிராமத்தை சேர்ந்தவர் உதயகுமார் (43). மும்பையில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். அங்கு மனைவி துறைச்சி (37), மகன்கள் அரசு (22), கிஷோர் (17) ஆகியோருடன் வசித்துள்ளார்.

கோடை விடுமுறையையொட்டி துறைச்சி மட்டும் 2 மகன்களுடன், சொந்த ஊரான சிறுமளஞ்சிக்கு வந்திருந்தார். அங்கு உறவினர் மகன் மனோஜ் (23), இரு நாட்களுக்கு முன் விபத்தில் படுகாயம் அடைந்து, நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருந்தார். அவரை பார்ப்பதற்காக நேற்று மதியம் துறைச்சி, மகன் கிஷோர் மற்றும் உறவினர் சிவகாமி (50) ஆகியோர் ஒரு காரில் நாகர்கோவில் புறப்பட்டனர்.

காரை உறவினர் சுரேஷ் ஓட்டினார். மதியம் 1 மணியளவில் கார், நாகர்கோவில் காவல்கிணறு நான்கு வழிச்சாலையில் வெள்ளமடம் அருகே சென்றபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து, அங்கு நின்றிருந்த டெம்போவின் பின்புறம் பயங்கரமாக மோதியது. இதில் காரின் முன் பகுதி நொறுங்கியது. இதில் கிஷோர், துறைச்சி, சிவகாமி ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். சுரேஷ் படுகாயத்துடன் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்து குறித்து ஆரல்வாய்மொழி போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகிறார்கள்.

நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த மனோஜ் நேற்று காலையிலேயே பரிதாபமாக இறந்தார். அவர் இறந்த தகவல் தெரியாமல், மனோஜை பார்க்க வந்தபோதுதான் துறைச்சி, கிஷோர், சிவகாமி ஆகியோர் பலியாகினர். தற்போது மனோஜ் மற்றும் விபத்தில் இறந்த 3 பேர் என 4 பேரின் உடல்களும் மருத்துவக்கல்லூரி பிணவறையில் உள்ளன. இந்த சம்பவம் அந்த கிராமத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



இராயபுரத்தில் புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை, தொகுதி மக்களின் பயன்பாட்டிற்காக, ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் ஸ்ரீ.ஆனந்த் அவர்கள் திறந்து வைத்தார்.

## ரூ.1 கோடி கேட்டு முதியவர் காரில் கடத்தல்:

# தோட்டத்தில் அடைத்து வைத்து மிரட்டல்; தனிப்படை அமைத்து மூவருக்கு போலீஸ் வலை



களக்காடு: ஜூன்.1–

நெல்லை மாவட்டம், களக்காடு அருகே செட்டிமேட்டை சேர்ந்தவர் ஜெகன் சாலமோன். இவர் சேரன்மகாதேவி அருகே ஒரு கிறிஸ்தவ சபையில் வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில் அவரை திடீரென சபை நிர்வாகிகள் பணி நீக்கம் செய்தனர். இதற்கு கோவிலம்மாள்புரத்தை சேர்ந்த சுப்பிரமணியன் (79) தான் காரணம் என்று கருதினார். இதனால் அவர் மீது ஆத்திரம் ஏற்பட்டது. எனினும் அவரிடம் நண்பர் போலவே பழகி வந்துள்ளார்.

சுப்பிரமணியன் டோனாவூரில் உள்ள ஒரு நிறுவனத்தில் கணக்கராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இந்நிலையில் கடந்த 27ம் தேதி ஜெகன் சாலமோன், தனது வீட்டில் ஜெபம் நடப்பதாகவும், அதில் கலந்து கொள்ள வருமாறும் சுப்பிரமணியனுக்கு அழைப்பு விடுத்தார். இதை நம்பி அவரது வீட்டிற்கு சென்றார். இதனைதொடர்ந்து ஜெகன் சாலமோன் உள்பட 3 பேர் சேர்ந்து சுப்பிரமணியனை ஒரு காரில் திசையன்விளைக்கு கடத்திச் சென்றனர்.

அங்குள்ள ஒரு தோட்டத்தில் அவரை அடைத்து வைத்து, ரூ.1 கோடி தந்தால் தான் விடுவிப்போம் என்று மிரட்டியுள்ளனர். இதையடுத்து பதறிய சுப்பிரமணியன் தனது குடும்பத்தினரை போனில் தொடர்பு கொண்டு கூறியுள்ளார். அவரது குடும்பத்தினரும் ஜெகன் சாலமோன் கூறியபடி அவரது நண்பர் வீட்டில் ரூ.5 லட்சத்தை முதற் கட்டமாக கொடுத்துள்ளனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் இரவில் சுப்பிரமணியன் தோட்டத்தில் இருந்து தப்பி ஓடி வந்து திருக்குறுங்குடி போலீசில் புகார் தெரிவித்தார். அதன்பேரில் போலீசார் ஜெகன் சாலமோன் உள்பட மூவர் மீது வழக்கு பதிந்து அவர்களை தேடி வருகின்றனர். ரூ.1 கோடி கேட்டு, முதியவர் கடத்தப்பட்ட சம்பவம் களக்காடு பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ் ரமேஷ்






2026 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது இதில் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றிக்கழக வேட்பாளராக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ் ரமேஷ் போட்டியிட்டார்

தேர்தலில் அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்

இந்நிலையில் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மணப்பாறை ஒன்றியம் கே பெரிய பட்டி மறவனூர் மற்றும் ஆண்டவர் கோவில் உள்ளிட்ட பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார்

அமைச்சர் எஸ் ரமேஷ் பேசுகையில்

ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகு தியில் ஒரு இளைஞனாகிய எனக்கு வாய்ப்பளித்த தமிழக வாக்காளர்கர்கள் என் மீது அதிகப்படியான நம்பிக்கையோடும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் மீதும் மிகப்பெரிய நம்பிக்கையோடு வாக்களித் தீர்கள் நீங்கள் வாக்களித்ததால் மட்டுமே இன்று நான் உங்கள் மத்தியில் எம்எல்ஏவாகவும் அமைச்சராகவும் நின்று பேசுகிறேன் இப்படிப்பட்ட வாய்ப்பை தந்த தமிழக வெற்றி கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்து மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்த தொகுதியாக இதை மாற்றிக் காட்டுவேன் நிச்சயம்

தற்போது நாங்கள் புதியவர்கள் தான் எங்களுக்கு கொஞ்சம் அவகாசம் வழங்குங்கள் வாக்களித்ததற்கு நன்றி கடனாக நிச்சயம் இந்த தொகுதியில் அனைத்து அடிப்படை தேவைகளையும் படிப்படியாக நிறைவேற்றி தருவோம்

இந்த ஆட்சியில் நாங்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்த பிறகு தான் மீண்டும் உங்களிடம் வாக்கு கேட்டு வருவோம் ஏனென்றால் தளபதி அவர்களின் அரசு இது மக்களுக்கான அரசு மாற்றம் தேவை என்ற ஒரே கொள்கை யோடு நீங்கள் எங்களுக்கு வாக்களித்து இருக்கிறீர்கள் அந்த நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றுவோம். உங்களின் தேவைகள் அடிப்படை வசதிகள் குறித்த மனுக்களை சட்டமன்ற அலுவலகத்தில் கொடுத்தால் நீங்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகள் அனைத்தையுமே நிச்சயமாக நிறைவேற்றித் தருவோம்

மேலும் இந்த ஏழை எளிய இளைஞனை உங்கள் வீட்டுப் பிள்ளையாக உங்களில் ஒருவனாக தளபதி மேல் அன்பு கொண்டு எனக்கு வாக்களித்து மிகப்பெரிய வெற்றியை பெறச் செய்த உங்கள் அனைவருக்கும் என்றும் நன்றி உள்ளவனாக இருப்பேன் என்பதை தெரிவித்துக் கொண்டு வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று பேசினார்.நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்திற்கு திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினருமான ரா கதிரவன் வடக்கு ஒன்றிய செயலாளர் பாண்டியன் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே சரவணன் வழக்கறிஞர் பிரிவு பிரபு பாண்டியன் மணப்பாறை நகர கழக செயலாளர் திருப்பதி அ அழகர் மாவட்ட துணை செயலாளர் தினேஷ் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் திருநாவுக்கரசு மாயவன் அம்ஜத் கான் ஜில்லா குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் .

கே பெரியப்பட்டியில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கியும் சிறப்பித்தனர்

# மகளிருக்கு ரூ.2,500 வழங்குவது எப்போது? அமைச்சர் விளக்கம்

நாகப்பட்டினம் ஜூன்.1–

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயத்தில் வழிபாடு நடத்துவதற்காக தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சன் நேற்று வந்திருந்தார். அப்போது அவர் பேராலயத்தில் பிரார்த்தனை செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தின் நிதிநிலை குறித்து இன்னும் 2 வாரங்களில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட உள்ளது. மதுரை மாநகராட்சி ஊழல் தொடர்பாக முழு அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அதே போல, அனைத்து தணிக்கை அறிக்கைகளும் கேட்கப்பட்டுள்ளன. மகளிர் உரிமைத் தொகை வட மாநில பெண்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. மகளிர் உரிமைத் தொகையை மாதம் ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்குவது தொடர்பாக பட்ஜெட்டில் தெரிவிக்கப்படும்.

கடந்த 2024 ல் பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக ரிசர்வ் வங்கி சில விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. கடந்த திமுக ஆட்சி காலத்தின்போது இத்தகைய விதிமுறைகள் எதுவும் இல்லை. எனவே ரிசர்வ் வங்கியின் விதிகளை பின்பற்றித் தான் விவசாயக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொடர்ந்து ஆலோசனை நடைபெற்று வருகிறது. இந்தியா ஒரு ஜனநாயக நாடு. யார் வேண்டுமானாலும் எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் இணைவதற்கு முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு. இவ்வாறு அமைச்சர் மரிய வில்சன் தெரிவித்தார்.

# சேலம் எப்போதும் அதிமுகவின் அசைக்க முடியாத கோட்டை வாக்காளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி நன்றி.



சேலம். ஜூன். 1–

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்கு பிறகு சேலம் மாவட்டம் எப்போதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அதிமுக) அசைக்க முடியாத கோட்டை என்பதை அத்தொகுதி மக்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளனர் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் (நீ) வலைத்தளப் பதிவில், சேலம் மாவட்ட மக்களுக்கும், குறிப்பாக தனக்கு இமாலய வெற்றியைத் தேடித்தந்த எடப்பாடி தொகுதி வாக்காளர்களுக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கியுள்ளார்.

சவால்களைத் தவிடுபொடியாக்கிய வரலாற்று வெற்றி

தேர்தல் களம் குறித்து எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "இன்றைக்கு நமக்கு எதிராக எவ்வளவு இக்கட்டான சூழ்நிலைகள், சவால்கள் முகாமிட்டிருந்தாலும், அத்தனையையும் தவிடுபொடியாக்கி சேலம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை நாம் சாத்தியப்படுத்தியிருக்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். அரசியல் ரீதியாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அதிமுக சேலத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ளதை இந்த வெற்றி காட்டுவதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

எடப்பாடியில் மெகா வெற்றி

நடப்பு சட்டமன்றத் தேர்தலில் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்களைக் காட்டிலும் சுமார் 98,200 வாக்குகள் என்ற மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

தன் மீது அளப்பரிய அன்பும் நம்பிக்கையும் கொண்டுள்ள எடப்பாடி சட்டமன்றத் தொகுதியின் வாக்காளப் பெருமக்கள், தனக்கு இந்த இமாலய வெற்றியை பரிசாக அளித்துள்ளதாக அவர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர்களுக்கு நன்றி

சேலம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள தொகுதிகளில், அதிமுக கூட்டணிக்கு ஆதரவாகப் பெருமளவில் வாக்களித்து, கழகத்தின் மீது தங்களின் பேராதரவை வெளிப்படுத்திய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியை "புரட்சித் தமிழர்" எடப்பாடி பழனிசாமி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் அதிமுக பெற்ற இந்த அசுர வளர்ச்சி மற்றும் வெற்றி, அக்கட்சியின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.







# புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் பேருந்து நிலையப் பகுதிகளை தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முகமது பர்வேஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு

அறந்தாங்கி ஜூன் 1

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் பேருந்து நிலையப் பகுதிகளை தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் முகமது பர்வேஸ் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



அரசு தலைமை மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள், சிகிச்சை வசதிகள், மருந்து இருப்பு, மருத்துவ உபகரணங்களின் பயன்பாடு மற்றும் மருத்துவமனை வளாகத்தின் தூய்மை உள்ளிட்ட அம்சங்களை அமைச்சர் ஆய்வு செய்தார்.

மேலும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணி யாளர்களிடம் மருத்துவ மனையின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து, பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தொடர்ந்து அறந்தாங்கி பேருந்து நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர், பயணிகளுக்கான அடிப்படை வசதிகள், குடிநீர் வசதி, கழிப்பறை பராமரிப்பு, தூய்மை பணிகள் மற்றும் பேருந்து நிலையத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பொதுமக்கள் மற்றும் பயணிகளின் குறைகளையும் கேட்டறிந்தார்.

ஆய்வின் போது சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகளும் உடன் இருந்தனர் அதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் முகமது பர்வேஸ் கூறும் பபோது:

தமிழகத்தில் மின் வெட்டு பிரச்சனை இருப்பதாக சொல்கிறார்கள் அதற்கான பிரச்சனைகளை மின்சார துறை அமைச்சர் பாரத்து வருகிறார் நிச்சயம் கூடிய விரைவில் சரி செய்து தருவார். அறந்தாங்கியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் பேட்டி

அறந்தாங்கியில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு செய்து கழிப்பறை வசதி சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர் அதனை சில தினங்களில் சரி செய்து தருவோம்

மக்களிடம் நல்ல ரெஸ்பான்ஸ் உள்ளது இந்த ரெஸ்பான்ஸ் ஐந்து ஆண்டுகளும் கொண்டு செல்வோம்!!!

அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியை பொருத்தவரை தண்ணீர் பிரச்சினை அதிகமாக உள்ளது அந்த தண்ணீர் பிரச்சனையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்

விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கர் தமிழக வெற்றி கரகத்தில் இணைவாரா என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் பர்வேஸ்

அவர் விராலிமலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நானும் மாவட்ட ஆட்சித் தலைவரும் நேற்று விராலிமலைக்கு சென்றிருந்தபோது எங்களை அவர் சந்தித்தார். இதில் வேறு எந்த அரசியலும் இல்லை

அறந்தாங்கி பேருந்து நிலையம் குறித்து மக்களிடம் கருத்துக்களை கேட்டு இன்னும் எளிதாக மக்கள் பயன்பெறும் வகையில் யாருக்கும் தொந்தரவு இல்லாமல் பேருந்து நிலையப் பணிகளை தொடங்குவோம்

விபத்துகள் நடக்காத அளவுக்கு சாலைகளை சரி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம் நவீன வசதிகளை கொண்ட புதுக்கோட்டை அரசு கல்லூரி மருத்துவமனையை விட அறந்தாங்கி அரசு மருத்துவமனையை கொண்டு வந்துள்ளோம்

ஏதேனும் விபத்து நிகழக் கூடாது அப்படி விபத்து நிகழ்ந்தால் உடனே மருத்துவம் பார்க்கும் அளவிற்கு அறந்தாங்கி அரசு மருத்துவமனை உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் பேட்டி அளித்தார்

# ஈரோடு மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் பழங்குடியினர் மக்களுக்கு உரிய சான்றிதழ்களை உடனே வழங்க வேண்டும்..

## வருவாய்த்துறை அமைச்சரை நேரில் சந்தித்து ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் என். எம் பிரதீப் வலியுறுத்தல்..

ஈரோடு. ஜூன். 01

ஈரோடு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் மக்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் உரிய அரசு சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என, வருவாய்த்துறை அமைச்சரிடம் ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் என். எம் பிரதீப் கோரிக்கை மனு கொடுத்து வலியுறுத்தி உள்ளார்.



ஈரோடு மற்றும் நீலகிரி, கோவை, திருப்பூர், சேலம் உள்ளிட்ட மேற்கு மண்டல பகுதியில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அதிக அளவிலான மலைவாழ் மக்கள் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளும், மற்றும் உரிய அரசு சான்றிதழ்களும் கிடைக்கப்பெறாமல் உள்ளது.

இதற்காக ஈரோடு தயா அறக்கட்டளையின் சார்பில் மாவட்ட நிர்வாகத்தை தொடர்ந்து அணுகி, ஈரோடு மாவட்டத்திலுள்ள மலைப்பகுதிகளான பர்கூர், தாளவாடி, கத்தரிமலை உள்ளிட்ட சுமார் 50க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு நேரில் சென்று அந்த மக்களின் கோரிக்கை களை கேட்டறிந்து, அதெல்லாம் ஈரோடு மாவட்ட நிர்வாகத் திற்கும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் மலைவாழ் பழங்குடியினர் மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து, அவர் களுக்கு கிடைக்க வேண் டிய ஆக்கப்பூர்வமான உதவிகளை பெற்றுத்தர பல முயற்சிகளை, ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் என். எம் பிரதீப் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

அதன் அடிப்படை யில் சில தினங்களுக்கு முன்பு சென்னை தலைமை செயலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே எ செங்கோட்டையனை நேரில் சந்தித்து, கத்தரிமலை உள்ளிட்ட பல்வேறு மலைப் பகுதிகளில் வசித்து வரும் பழங்குடியினர் மக்களுக்கான அடிப்படை தேவையான சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி ரேஷன் வசதி உள்ளிட்ட தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர கேட்டும், கடந்த சுமார் 70 ஆண்டு காலமாக மலைவாழ் மக்கள், மற்றும் பழங்குடியினர் இன மக்களுக்கான அரசு சார்பில் வழங்கப்படும் சான்றிதழ்கள் குறிப்பாக மலைவாழ் பழங்குடி யினர் எஸசி. எஸ் டி ஜாதி சான்றிதழ் போன்றவை அந்த பழங்குடியினர் இன மாணவர்களுக்கு கிடைத்தால் மட்டுமே அவர்களுக்கு அரசன் சார்பில் வழங்கப்படும் உரிய உதவிகள், வேலை வாய்ப்புகள் கிடைக்க அதிக வாய்ப்புள்ள தாகவும், அதனால் அதற்குரிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. ஏ செங்கோட்டையன் இடம் ஈரோடு தயா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் என். எம் பிரதீப் வலியுறுத்தி கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.

# உள்ளாட்சி தேர்தல் குறித்து, அந்த நேரத்தில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டி அறிவிப்போம்: வைகோ

கும்பகோணம்: ஜூன்.1–

உள்ளாட்சி தேர்தல் குறித்து, அந்த நேரத்தில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டி அறிவிப்போம். அதே நேரத்தில் தற்போது திமுகவுடன் கூட்டணி தோழமை தொடர்கிறது என்று வைகோ தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த மதிமுக பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.



அப்போது அவர், "தமிழக மக்களின் ஆவேசத்திற்கு மத்திய அரசு ஆளாக நேரிடும் என்ற எண்ணம் மேகேதாட்டு விவகாரத்தில் வந்தால் அன்றி வேறு வழியில்லை. மேகேதாட்டில் அணை கட்ட அனுமதிக்ககூடாது என மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜூன் 2ம் தேதி சென்னையில் பல்வேறு கட்சி, அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதே போல் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் ஜூன் 5ம் தேதி விவசாயிகள் பிரச்சினை மற்றும் 3 கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாநிலை போராட்டம் நடைபெறுகிறது.

தமிழக தற்காலிக ஆளுநர், திமிர் பிடித்து சர்வதிகாரியாக திருவள்ளுவருக்கு காவி ஆடை போர்த்தியது மன்னிக்க முடியாது. மகா அயோக்கியத்தனம். அவருக்கு காவி ஆடை போர்த்தியது திட்டமிட்டு நம்மை உசுப்பி பார்ப்பது போல் ஆணவத்துடன் செய்துள்ளார். இந்தச் செயல் தொடருமானால் ஆளுநர் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும் மதிமுக கருப்புக் கொடி காட்டும்.

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா விவசாயம் கடினமானது என்று தான் சொல்லியிருப்பார். விவசாயத்தின் முதன்மை தன்மையை குறைத்து மதிப்பிட முடியாது. அவர் எந்தப் பின்னணியில் சொல்லியிருப்பார் எனத் தெரியவில்லை.

முதல்வர் ஜோசப் விஜய், ஆட்சிக்கு வந்து சில நாட்கள் தான் ஆகின்றன. அதிகாரத்திற்கு, அனுபவத்திற்கு அவர் புதிது. இப்போது அவர் நிர்வாகத்திற்குள் சென்ற பின்னர் தான் அனைத்து கஜானாவும் காலியாக பணமே இல்லை எனத் தெரிகிறது. அவருக்கு 6 மாதம் காலம் அவகாசம் வழங்க வேண்டும். அதுவரை விமர்சிக்க வேண்டாம்.

உள்ளாட்சி தேர்தல் குறித்து, அந்த நேரத்தில் நிர்வாக குழு கூட்டம் கூட்டி அறிவிப்போம். அதே நேரத்தில் தற்போது திமுகவுடன் கூட்டணி தோழமை தொடர்கிறது.

தமிழகத்தில் வன்முறை என்பது அனைத்து ஆட்சிகளிலும் நடைபெற்றுள்ளது. சிறு குழந்தைகளை நாசமாக்குவது தொடர்ந்து நடந்து கொண்டே வருகிறது. பாலியல் வன்முறையில் ஈடுபட்டு கொலை செய்பவர்களுக்கு பிணை விடுதலை வழங்கக் கூடாது.

அவர்களுக்கு வாழ்நாள் சிறை தண்டனை வழங்கும் விதமாக குற்றவியில் சட்டத்தை திருத்தி மாநில அரசுகள் தீர்மானம் நிறைவேற்றி, அந்த தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி, அதை சட்டமாக்க வேண்டும். இந்த சம்பவத்தில் போலீஸார் திறமையாக செயல்படுகிறார்கள். இந்த சமூகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் ஒழிக்கவேண்டும். பாலியல் குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை பெற்றுத் தர வேண்டும்.

பிரதமர் மோடி பல ஆண்டுகளாக யாரையும் சந்திப்பது இல்லை. அவரைப் போல் நகைச்சுவை செய்வதில் எந்த அரசியல்வாதிகளாலும் முடியாது. முதல்வர் ஜோசப் விஜய், செய்தியாளர்களை சந்திக்க வேண்டும், தவிர்க்க கூடாது என்பது தான் என் வேண்டுகோள் என்றார் அவர்.

# விழுப்புரம் அதிமுக கட்சி ஆபீஸ் விவகாரம்

# இபிஎஸ் ஆதரவாளரிடம் சாவியை ஒப்படைத்தது சி.வி.சண்முகம் தரப்பு

விழுப்புரம்: ஜூன்.1–

விழுப்புரம் அதிமுக கட்சி அலுவலகத்தின் சாவியை நீண்ட இழுபறிக்கு பின்னர் சி.வி.சண்முகம் தரப்பினர், இபிஎஸ் நியமித்த மாவட்ட செயலாளரிடம் நேற்று ஒப்படைத்தனர். அதிமுகவில், தவெக ஆட்சிக்கு ஆதரவு அளித்தது தொடர்பாக எழுந்த உட்கட்சி பிரச்னையில் எஸ்பி. வேலுமணி, சி.வி சண்முகம், விஜயபாஸ்கர் உள்ளிட்ட எம்எல்ஏக் களின் கட்சி பதவிகள் பறித்து, இபிஎஸ் தனது ஆதரவாளர்களை நியமித்தார்.

அப்போது மாவட்டங் களில் கட்சி அலுவல கங்களை கைப்பற்றுவதில் இபிஎஸ் தரப்பிற்கும், அதிருப்தி எம்எல்ஏக் களுக்குமிடையே போட்டி நிலவியது. இந்நிலையில் அதிருப்தி எம்எல்ஏக்களில் வேலுமணி உள்ளிட்ட வர்கள் மீண்டும் இபிஎஸ்சை சந்தித்து இணைந்தாலும், சி.வி.சண்முகம், விஜயபாஸ்கர் ஆகியோர் தனித்து உள்ளனர். விழுப்புரம் மாவட்டத் தில் சி.வி. சண்முகத்திட மிருந்த மாவட்ட செயலாளர் பதவி பறிக்கப்பட்டு ஏற்கனவே நகர செயலாளராக இருந்த பசுபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி விழுப்புரம் அதிமுக கட்சி அலுவலகத்தின் சாவியை தன்னிடம் வழங்கக்கோரி எஸ்பியிடம் மாவட்ட செயலாளர் பசுபதி மனு அளித்தார். கட்சி அலு வலகத்தை கைப்பற்று வதில் இருதரப் பினரிடையே மோதல் சூழல் ஏற்பட்டதால் போலீசார் கட்சி அலுவலகத்தை கட்டுப்பாட்டில் எடுத்து ஆர்டிஓ விசாரணைக்கு பரிந்துரைத்தனர். அதன்படி ஆர்டிஓ முருகேசன், சி.வி சண்முகம் தரப்பு, இபிஎஸ் தரப்பில் கட்சி அலுவலகம் சொந்தம் கொண்டாடுவதற்கான ஆவணங்களுடன் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பினார்.

இருதரப்பினரும் தனித்தனியே ஆஜராகி கட்சி அலுவலகத்திற்குரிய கோப்புகளை வழங்கினர். இதுபற்றி ஆர்டிஓ ஆய்வு செய்து வந்தார். இதனால் கட்சி அலுவலகம் மூடப்பட்டு போலீஸ் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. இறுதியாக நேற்று காலை ஆர்டிஓ அதிமுக கட்சி அலுவலகம் மீதான விசாரணை முடிந்து உத்தரவு பிறப்பித்தார். அதில் இபிஎஸ் தரப்பு மாவட்ட செயலாளரிடம் சாவியை ஒப்படைக்க உத்தரவிட்டார். தேர்தல் ஆணையம் வழிகாட்டு தல், விதிமுறைபடி கட்சியின் பொதுச் செயலாளர் வசம்தான் கட்சி அலுவலகம் இருக்கிறது. அவரால் நியமிக்கப்பட்ட மாவட்ட செயலாளரிடம் வழங்க வேண்டுமென்று உத்தரவில் கூறியிருந்ததாக தெரிகிறது. இதைதொடர்ந்து நேற்று காலை சி.வி சண்முகம் தரப்பை சேர்ந்த குணா என்பவர், மாவட்ட செயலாளர் பசுபதியிடம் சாவியை ஒப்படைத்தார். இதையடுத்து அவர் நிர்வாகிகளுடன் கட்சி அலுவலகத்திற்குள் சென்று கொடியேற்றியும், எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்தும், பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினார்.

நிர்வாகிகளிடம் பேசிய மாவட்ட செயலாளர் பசுபதி, தவெகவிற்கு சென்று நினைத்ததை பெற்றுவிடலாம் என்று செல்பவர்கள் ஏமாற்றத்துடன்தான் திரும்புவார்கள். பிரிந்து சென்றவர்கள் நம்மிடம் வருவார்கள். கட்சியை நாம் வலுப்படுத்த வேண்டும் என்றார். அங்கிருந்த சி.வி சண்முகம் பேனர்களை வெளியேற்றிவிட்டு பசுபதியின் பேனரை வைத்தனர்.

* ஆதரவாளர்களோடு வெளியேற சி.வி.சண்முகம் உறுதி

சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் கூறுகையில், அதிமுகவில் தலைமையை எதிர்த்து இவ்வளவு பிரச்னைகளை சந்தித்துவிட்டு மீண்டும் அங்கு செல்வதில் அவருக்கு துளியும் விருப்பமில்லை. எனவே தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்வதில் உறுதியாக இருக்கிறார். வரும் 2ம் தேதி சென்னை செல்லும் சண்முகம் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆதரவாளர்களோடு அதிமுகவிலிருந்து வெளியேற திட்டமிட்டிருக்கிறார். தவெகவில் இணைவாரா அல்லது அரசியலிலிருந்து சற்று ஒதுங்கியிருப்பாரா என்று தெரியவில்லை என்றனர்.

# விளையாட்டு துறை அமைச்சராக இருந்து கொண்டு பிஎப்ஐ தலைவர் பதவியில் ஆதவ் அர்ஜூனா நீடிப்பதா..? அதிமுக எம்பி இன்பத்துரை சரமாரி கேள்வி

சென்னை: ஜூன்.1–

விளையாட்டு துறை அமைச்சராக இருந்து கொண்டு பிஎப்ஐ தலைவர் பதவியில் ஆதவ்அர்ஜூனா நீடிப்பதா? என்று அதிமுகஎம்பிஇன்பத்துரை சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார். தமிழக சட்டப்பேரவை தேர்தல் முடிந்து பல்வேறு கட்சிகளின் ஆதரவுடன் தவெக ஆட்சி அமைத்துள்ளது. தொடர்ந்து எதிர்க்கட்சி எம்எல்ஏக்களை இழுக்கும் படலத்தில் தவெக இறங்கியுள்ளது. குதிரை பேரத்தில், குதிரை வேகத்தில் எம்எல்ஏக்களை தங்கள் பக்கம் இழுத்து வருகிறது. அந்த வகையில் அதிமுகவைச் சேர்ந்த மதுராந்தகம் எம்எல்ஏ மரகதம் குமரவேல், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார், தாராபுரம் எம்எல்ஏ சத்யபாமா ஆகியோர் தங்களது பதவியை கடந்த 25ம்தேதி ராஜினாமா செய்தனர். ராஜினாமா செய்த கையோடு சென்னை தலைமைச் செயலகத் தில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவை நேரில் சந்தித்த மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா ஆகிய மூன்று பேரும் தங்களை தவெகவில் இணைத்துக் கொண்டனர்.

கட்சியில் இணைந்த மறுநிமிடமே அவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. தலைமை செயலகத்திலே ஒரு அமைச்சர் முன்னிலையில் அதிமுக எம்எல்ஏக்கள் தவெகவில் இணைந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தலைமை செயலகமா? அல்லது தவெக அலுவலகமாக என்று அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அண்மையில் அதிமுக நிர்வாகிகள் தவெகவில் இணையும் நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, "90 சதவீத அதிமுக நிர்வாகிகள் தவெகவிற்கு மாறத் தயாராக இருக்கிறார்கள்" என்றார். இது அதிமுக தலைவர்கள் இடையே கடும் கோபத்தை உருவாக்கியிருந்தது. உடனடியாக அதிமுக தலைவர் பதிலடி கொடுத்தனர். ஆதவ் அர்ஜூனாவின் இந்த கருத்துக்கு அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கடும் எச்சரிக்கை விடுத்தனர். அரசியல் அதிகார பலம், பண பலத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி நிர்வாகிகளை வளைக்க பார்க்கிறார் என்று குற்றம் சாட்டினர்.

அதே நேரத்தில் தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் பதவியிலும் ஆதவ் அர்ஜூனா இருந்து வருகிறார். இந்திய கூடைப்பந்து சம்மேளனத்தின் தலைவர்(பிஎப்ஐ) அதிகாரப்பூர்வ இணையதளத் தரவுகளின்படி, அவர் இன்னமும் அந்த அமைப்பின் தேசிய தலைவராக தொடர்ந்து நீடித்து வருகிறார். விளையாட்டுத் துறையை அரசு ரீதியாகக் கண்காணித்து ஒழுங்குபடுத்த வேண்டிய அமைச்சரே, ஒரு குறிப்பிட்ட விளையாட்டின் தேசிய கூட்டமைப்பைத் தலைமை தாங்கி நடத்தும் நிர்வாகியாகவும் இருப்பது முறையற்றது என்று அரசியல் மற்றும் விளையாட்டு வட்டாரங்களில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. எனவே அவரை இந்திய கூடைப்பந்து சம்மேளன (பிஎப்ஐ) தலைவர் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இந்த விவகாரத்தை தற்போது அதிமுகவினர் கையில் எடுத்து உள்ளனர்.

இதுதொடர்பாக அதிமுக எம்பி இன்பத்துரை தனது சமூக வலைத்தளம் பதிவில், "தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, இந்திய கூடைப்பந்து சம்மேளனத்தின் (பிஎப்ஐ) தலைவர் பதவியையும் தொடர்ந்து வகித்து வருகிறார். இதனை பிஎப்ஐ இணையதளம் உறுதிப்படுத்துகிறது. இது பரஸ்பர நலன்களின் முரண்பாடு குறித்த கடுமையான கவலைகளை எழுப்புகிறது. பாரபட்சமற்ற விளையாட்டு நிர்வாகத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கிறது. நிர்வாகம் நியாயமாக இருக்க வேண்டும் என்றால், அங்கு ஒருதலைப்பட்சமான சார்புநிலை இல்லாமல் இருந்தால் மட்டும் போதாது; சார்புநிலை இருப்பது போன்ற தோற்றமும் கூட இருக்கக்கூடாது'' என்று தெரிவித்துள்ளார்.

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ள இந்த விவகாரத்தில், விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தனது தேசியத் தலைவர் பதவியை ராஜினாமா செய்வாரா அல்லது அந்த பதவியில் இருந்து நீக்கப்படுவாரா? என்ற பரபரப்பு தற்போது உருவாகியுள்ளது.


பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
தமிழ்நாடு அரசு
ஜூன் 1 திருச்சி
கிழக்கு தொகுதியில்
வாக்களித்து மகத்தான
வெற்றிப்பெற வைத்த
வாக்காள பெருமக்களுக்கு
நன்றி தெறிவிக்க
வருகை தரும்
முதலமைச்சர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இளைஞர்களின் நம்பிக்கை
நாயகரே
வருக! வருக!! என
வணங்கி வரவேற்கின்றேன்
இடம் : புனித வளனார் கல்லூரி வளாகம்
திருச்சி
KPSA.அப்துல் சுபான்
தமிழக வெற்றிக் கழகம்
திருச்சி தெற்கு மாவட்ட நிர்வாகி


பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
ஜூன் 1 திருச்சி
முதல்வர்
கிழக்கு தொகுதியில்
வாக்களித்து மகத்தான
வெற்றிப்பெற வைத்த
வாக்காள பெருமக்களுக்கு
நன்றி தெறிவிக்க
வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
தமிழகத்தின்
முதல்வரே
வருக! வருக!! என
வணங்கி வரவேற்கின்றேன்
இடம் : புனித வளனார் கல்லூரி வளாகம்
திருச்சி
P.வெள்ளைச்சாமி
ஒன்றிய கழக செயலாளர் (கிழக்கு),
தமிழக வெற்றிக் கழகம்
மருங்காபுரி ஒன்றியம்,
திருச்சி தெற்குமாவட்டம்


பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
ஜூன் 1 திருச்சி
கிழக்கு தொகுதியில்
வாக்களித்து மகத்தான
வெற்றிப்பெற வைத்த
வாக்காள பெருமக்களுக்கு
நன்றி தெறிவிக்க
வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
பெண்களின்
பாதுகாவலரே
வருக! வருக!! என
வணங்கி வரவேற்கின்றேன்
இடம் : புனித வளனார் கல்லூரி வளாகம்
திருச்சி
A.ஜென்ஸி
மாவட்ட மகளிரணி அமைப்பாளர்
தமிழக வெற்றிக் கழகம்
திருச்சி தெற்குமாவட்டம்